**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.177/2025**

**நாள் : 02.03.2026**

**ம.சா. 1 திருமதி.இந்திராணி**

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த விபத்து மண் சாலையில் நடக்கவில்லை என்றால் சரிதான். விபத்து தார் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். அது இருவழிச்சாலை ஆகும். விபத்து நடந்த சமயத்தில் அந்த சாலையில் போக்குவரத்து பணிகள் நடந்துகொண்டிருந்தது என்றால் சரிதான். அந்த சாலையில் ஒரு பகுதியில்தான் வேலை செய்து வந்தார்கள். மற்றொரு பகுதியில் வாகனங்கள் போய்வந்ததாக சாட்சி கூறுகிறார். அந்த வகையில் இருவழிச்சாலையானது விபத்து தேதியில் குறுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆகையால் எந்த ஒரு வாகனமும் வேகமாக போய்வர முடியாது என்றால் சரிதான். விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ளது. ஒன்று இருசக்கர வாகனம், மற்றொன்று லாரி. எனது கணவருக்கு சொந்தமானதுதான் இருசக்கர வாகனம் என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனத்தில்தான் எனது கணவர் வேலைக்கு செல்வார் என்றால் சரிதான். அதாவது விபத்து சமயத்தில் எனது கணவர் வாணியம்பாடி நோக்கி சென்றார். அதாவது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றதாக சாட்சி கூறுகிறார். லாரியானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி எதிர்திசையில் வந்தது என்றால் சரிதான். விபத்தானது மலர் டைல்ஸ் கடைக்கு எதிர்புறத்தில் நடந்தது. அந்த கடை அமைந்திருந்த திசை எனக்கு தெரியவில்லை. ஆனால் திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலையில் வலதுபுறத்தில் உள்ளது. விபத்து நடந்த இடமானது மேட்டுச்சக்கரகுப்பம் பகுதியை சேர்ந்தது என்றால் சரிதான். எனது கணவருக்கு சொந்தமான இருசக்க வாகனத்திற்கு பதிவுச்சான்று, காப்பீடு உள்ளது. அதேபோல் எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமமும் உள்ளது. இருசக்கர வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில் வாகனத்தில்

செல்வோருக்கு பாதிப்பு ஏற்படும்பட்சத்தில் இழப்பீடு தரவேண்டியதற்காகத்தான் என்றால் சரிதான். அந்த வகையில் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை வழக்கில் தரப்பினராக கட்சி சேர்க்கவேண்டும் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு தனது வழக்கறிஞுரைத்தான் கேட்கவேண்டும் என்று கூறுகிறார். தனக்கோ அல்லது தனது வாகனத்திற்கோ பாதிப்பு ஏற்படும்பட்சத்தில் நஷ்டஈடு பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் காப்பீடு செய்யப்படுகிறது என்றால் சரிதான். அந்த வகையில் இருசக்கர வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்த நிறுவனம் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரிதான். விபத்தானது எனது கணவரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு எனது கணவரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டதால் விபத்தில் சம்பந்தப்பட்ட இருவாகனங்களின் காப்பீட்டு நிறுவனமும் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. நான் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு பாலிசியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் உண்டா என்றால் இல்லை. குறுகலான சாலையில் எந்தவொரு வாகனமும் வேகமாக வருவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சில நேரங்களில் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாக வருவதற்கு வாய்ப்புண்டு. அதேபோல்தான் எனது கணவரும் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்றால் சரியல்ல என்று கூறி சாட்சி திட்டவட்டமாக மறுக்கிறார். விபத்து நடந்த சமயத்தில் எதிரே வந்த லாரியை பார்த்த எனது கணவர் நிலைதடுமாறி பின்புறமாக விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. லாரியின் முன்சக்கரம் எனது கணவரின் இடுப்பின்மீது ஏறியது என்று சாட்சி பதிலளிக்கிறார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றி அதனை நேரில் பார்த்த பாலாஜி என்பவர் சொல்ல கேட்டு தெரிந்துகொண்டேன். பாலாஜி சொன்ன தகவலின் அடிப்படையில்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். லாரியின் முன்சக்கரம் ஏறி என் கணவர்மீது மோதியதாக ம.சா.ஆ.1 ஆவணத்தில் எந்தவொரு இடததிலும்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. சாட்சியிடம் ம.சா.ஆ.1 காட்டப்பட்டு முன்சக்கரமா, அல்லது பின்சக்கரமா என்று குறிப்பாக சொல்லவில்லை என்று ஒப்புக்கொள்கிறார். விபத்தில் சம்பந்தப்பட்ட லாரி மற்றும் இருசக்கர வாகனம் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது கணவரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் DL not produced, CR issued என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதனை பொருத்து மனுதாரர் தரப்பில் ஆட்சேபணையுடன் விசாரணையானது பதிவு செய்யப்படுகிறது. (அத்துடன் மனுதாரின் கணவரது இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமமானது ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.) சாட்சியிடம் மறுபடியும் மோட்டார் வாகன ஆய்வின்போது ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று கேள்வி எழுப்பப்பட்டதற்கு அதுபற்றி தனக்கு தெரியாது என்று கூறுகிறார். மோட்டார் வாகன ஆய்வுக்கு பின்னிட்டு எனது கணவரின் வாகனம் திருப்பி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு பாலிசியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்காத ஒரே காரணத்திற்காக இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்து சாலையானது நான்கு வழிச்சாலை என்றால் சரியல்ல. போலீசார் தயாரித்த பார்வை மகசர், மாதிரி வரைபடத்தில் நான்கு வழிச்சாலை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சாலையில் இருபக்கத்திலும் பள்ளம் மற்றும் மழையின் காரணமாக தண்ணீர் தேங்கி சேறும் சகதியுமாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இதுசம்பந்தமாக பார்வை மகசர் என்றால் என்னவென்று கேட்டதற்கு அதுபற்றி சாட்சி தனக்கு தெரியாது என்று கூறுகிறார். போலீசார் வந்து விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டபோது தயாரித்து எழுதிகொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பார்வையிட்டபோது

எழுதிக்கொண்டதுதான் பார்வை மகசர் என்று தற்போது தெரிந்துகொண்டேன். விபத்தில் லாரியும், இருசக்கர வாகனமும் சம்பந்தப்பட்ட நிலையில் இருவாகன ஓட்டுநர்களின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்காத நிலையில் வேறு ஒரு நபர் சொன்ன தகவலின் அடிப்படையில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் விபத்தினால் காயம்பட்டு இறந்தது உண்மை என்பதால் தீர விசாரித்து தெரிந்துகொண்டு புகார் கொடுத்துள்ளேன். விபத்தை நேரில் பார்த்த பாலாஜியை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். நான் கோரியுள்ள நஷ்டஈட்டின் முழுதொகையும் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. எனது கணவரின் அஜாக்கிரதையும் விபத்திற்கு காரணம் என்பதால் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமும் பகுதி இழப்பீட்டு தொகை கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. எனவே 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தை முழுமையான பொறுப்புக்கு உள்ளாக்க இயலாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு சட்டரீதியானது அல்ல, தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இருவாகன ஓட்டிகளின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் இருவகாகனங்களின் தற்சார்பு கவனமின்மையும் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈட்டுத்தொகையை 2ஆம் எதிர்மனுதாரர் மட்டுமே கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.